[1970 மார்ச் 13

திரு. கொளத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, மக்களுடைய தேவைகளை அனுசரித்து, இனிமேலாவது, திட்டம் தயாரித்து அனுப்பினால் அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : நிர்வாக அதிகாரியிடம் மாவட்டத் தலைவர் கேட்டிருந்த செயற்குறிப்பு அரசுக்கு விரைவில் தரவேண்டும் என்று கேட்டிருப்பதாக நெடுஞ்சாலைத் தலைமை பொறியாளர் கருத்தினைத் தெரிவித்திருக்கிறார். உயிர் காப்பு நிதிக் குழுவின் சார்பாக கடனைப் பெற்று, அந்தத் திட்டத்தின் கீழ் தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் மரக்காணம் போன்ற பேரூராட்சிக்கு ரூ. 3 லட்சம் ஒதுக்கீட்டில் புதுத் திட்டத்தை அனுப்பி இருக்கிறார்கள். தலைமைப் பொறியாளர் திட்டச் செயற்குறிப்பு அனுப்பும்படி கேட்கப்பட்டிருக்கிறார்.

காளியாகுடி ஊராட்சிக்கு தெரு விளக்குகள்

* 364 வினா.—**திரு. பி. ஜெயராஜ் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நன்னிலம் தாலுக்கா, காளியாகுடி பஞ்சாயத்தைச் சேர்ந்த கிராமங்களுக்குத் தெரு விளக்கு போடுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா ?

(இ) ஆம் என்றால், எப்போது?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) & (இ) நன்னிலம் தாலூக்கா, காளியாகுடி ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களுக்கு தெருவிளக்கு வசதி விரிவுபடுத்தும் வேலைகள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. விளக்குக் கம்பங்கள் இப்போது நடப்பட்டு வருகின்றன. இந்த வேலைகள் விரைவில் முடிக்கப்படும்.

திரு. பி. எஸ். தனுஷ்கோடி : தலைவர் அவர்களே, இந்த ஊராட்சிக் கிராமங்களுக்கு தெருவிளக்குப் போடும்போது, ஊராட்சி எல்லைக்குட்பட அரிசனத் தெருக்களுக்கும் லைட் போட வேண்டியதையும் சேர்த்துக் கணக்கிடாவும். லைட் போடும்போது போடுவது கிடையாது. லைட் போடும்போது, அரிசனத் தெருக்களுக்கும் போட வேண்டும் என்று அரசு உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, கேள்வி நன்னிலம் தாலுகா காளியாங்குடி ஊராட்சியைச் சேர்ந்த கிராமங்களுக்கு தெரு விளக்குப் போடுவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா என்பது. இதற்கும் துணைக் கேள்விக்கும் தொடர்பு இல்லை என்றாலும், கூடுமான வரையில் கிராமத்தில் இருக்கக்கூடிய எல்லாத் தெருக்களுக்கும் மின்சாரம் கொடுக்க வேண்டும் என்பதுதான் திட்டம். அதிலே முக்கியமாக தாழ்த்தப்பட்டவர்கள் வாழும் பகுதிகளுக்குச் சலுகை கொடுத்து மின்சாரம் வழங்கத் திட்டங்கள் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. குறை ஏதாவது இருந்து அது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால், பரிசீலிக்கப்படும்.